## பணியின்போது உயிரிழப்பு

# தொழிலாளி குடும்பத்துக்கு ரூ.77 ஆயிரம் நிதியுதவி

## கோவை இஎஸ்ஐ வழங்கியது




பணியின்போது உயிரிழந்த தொழிலாளி செல்வராஜ் மனைவி அம்சவேணியிடம் இஎஸ்ஐ அதிகாரிகள் அரசின் அனுமதி ஆணை மற்றும் ரூ.77,840க்கான காசோலை வழங்கினர்.

மேட்டுப்பாளையம், ஜூலை 31-

பணியின்போது உயிரிழந்த தொழிலாளி குடும்பத்துக்கு கோவை இஎஸ்ஐ சார்பில் ரூ.77 ஆயிரத்துக்கான காசோலை வழங்கப்பட்டது.

மேட்டுப்பாளையம் அடுத்துள்ள தேக்கம்பட்டி தனியார் நிறுவனத்தில் ஒப்பந்த அடிப்படையில் செல்வராஜ் என்பவர் உதவியாளராக பணிபுரிந்து வந்தார். இவர் கடந்த 7 ஆண்டுகளாக இஎஸ்ஐயில் பதிவு செய்து வந்துள்ளார். இந்நிலையில் கடந்த ஆண்டு டிசம்பர் 8ம் தேதி நிறுவனத்தில் பணியில் இருந்த போது அவருக்கு திடீர் உடல் நலக்குறைவு ஏற்பட்டது.

இதனையடுத்து கோவை இஎஸ்ஐ மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர் சிகிச்சை பலனின்றி 9ம் தேதி உயிரிழந்தார். இதை தொடர்ந்து இஎஸ்ஐ சட்டப்படி பணியின் போது உயிரிழப்பு, இஎஸ்ஐயில் பதிவு செய்திருந்ததால், இதனை தொழில் சார்ந்த இறப்புகளில் ஒன்றாக கருதி இறந்த செல்வராஜ் குடும்பத்திற்கு சான்றோர் உதவி பயன் வழங்கியது. மேலும், அவரது மனைவி அம்சவேணிக்கு மாதந்தோறும் ரூ.11,774 வழங்கப்பட உள்ளது.

இந்நிலையில் இஎஸ்ஐ கோவை மண்டல அலுவலகத்தின் துணை இயக்குநர் இசக்கி சிவா, மேட்டுப்பாளையம் கிளை அலுவலக மேலாளர் ஸ்ரீராஜ் சிவசங்கர் தலைமையில் ஒப்பந்ததாரர் தேவேந்திரன் முன்னிலையில் சார்ந்தோர் உதவி பயன் பெறுவதற்கான அரசின் அனுமதி ஆணை மற்றும் 77,840 ரூபாய்க்கான காசோலையை அமசவேணிக்கு வழங்கினர்.

## தனியார் நிறுவனத்தில் வேலை செய்தபோது

# உயிரிழந்தவரின் குடும்பத்துக்கு மாதாந்திர உதவித்தொகை

கோவை, ஜூலை.31-

மேட்டுப்பாளையம் அருகே தேக்கம்பட்டியில் உள்ள ஒரு தனியார் நிறுவனத்தில் செல்வராஜ் என்பவர் உதவியாளராக வேலை செய்து வந்தார். அவர் 7 ஆண்டாக இ.எஸ்.ஐ. சட்டத்தின் கீழ் காப்பீடு செய்யப் பட்ட நபராக இருந்தார். அவருக்கு கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 8-ந் தேதி வேலை செய்த போது திடீரென்று உடல்நலக்குறைவு ஏற்பட்டது. உடனே அவரை சிங்காநல்லூரில் உள்ள இ.எஸ்.ஐ. மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு அவர் அடுத்த நாள் பரிதாப மாக உயிரிழந்தார். இ.எஸ்.ஐ. சட்டத்தின்படி ரூ.21 ஆயிரம் வரை சம்பளம் பெறும் தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு பயன்கள் பெற தகுதியானவர்கள். பணியின்போதோ அல்லது விபத்தின்போதோ மரணம் அடைந்தால் அந்த நபரின் மனைவி மற்றும் பெற்றோருக்கு வாழ்நாள் முழுவதும், ஆண் குழந்தைகளுக்கு 25 வயது வரையும், பெண் குழந்தைகளுக்கு திருமணமாகும் வரையும் உதவி பகிர்ந்த ளிக்கப்படும். எனவே உயிரிழந்த செல்வராஜின் மனைவி அம்சவே ணிக்கு மாதம் தோறும் ரூ.11 ஆயிரத்து 774 உதவித்தொகை வழங் கும் நிகழ்ச்சி நடந்தது. இதில் கோவை மண்டல அலுவலகத்தின் துணை இயக்குனர் இசக்கி சிவா, மேட்டுப்பாளையம் கிளை அலுவ லக மேலாளர் ஸ்ரீராஜ் சிவசங்கர் ஆகியோர் அதற்கான அனுமதி ஆணை மற்றும் ரூ.77 ஆயிரத்து 840 ஆகியவற்றை வழங்கினர்.

# தொழிலாளியின் குடும்பத்திற்கு உதவித் தொகை

**மேட்டுப்பாளையம், ஜூலை 31-**

காரமடை அருகே தேக்கம்பட்டியில் உள்ள தனியார் நிறுவனத்தில் செல்வராஜ் என்பவர் உதவியாளராக பணியாற்றி வந்தார். கடந்த 7 ஆண்டுகளாக செல்வராஜுக்கு இ.எஸ்.ஐ. பிடிக்கப்பட்டது.

கடந்த ஆண்டு டிசம்பர் 8ம் தேதி, செல்வராஜ் பணிபுரியும் போது, திடீரென தொடர்ந்து வாந்தி எடுத்தார். அவருக்கு, முதலுதவி அளித்த பிறகு, சிங்காநல்லூரில் உள்ள இ.எஸ்.ஐ. மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். பின் டிசம்பர் 9ம் தேதி அதிகாலை மாரடைப்பால் காலமானார். செல்வராஜ்,

பணியின் போது இந்த சம்பவம் ஏற்பட்டதாலும், இ.எஸ்.ஐ. திட்டத்தின் கீழ் காப்பீட்டாளராக இருந்ததாலும், இ.எஸ்.ஐ. கார்ப்பரேஷன் நிறுவனம் மறைந்த செல்வராஜ் குடும்பத்திற்கு உதவி பயன் வழங்கியது. அதன் படி மறைந்த செல்வராஜின் மனைவி அம்சவேணிக்கு மாதம்தோறும் சார்ந்தோருக்கான உதவி தொகை ரூ.11,774 பெற ஆணை நேற்று வழங்கப்பட்டது.

கோவை சார் மண்டல துணை இயக்குனர் இசக்கி சிவா, மேட்டுப்பாளையம் கிளை மேலாளர் ஸ்ரீராஜ் சிவசங்கர் ஆகியோர் செல்வராஜ் குடும்பத்திற்கு அனுமதி ஆணை மற்றும் ரூ.77,840 உதவி தொகையை வழங்கினர்.